Cr.M.P.No.1864/2024 நாள் 20.12.2024

PW1

தமிழ்ராஜ், த/பெ. அந்தோணி என்ற திருப்பதி, என்.சண்முகசுந்தரபுரம், திருவில்லிபுத்தூர்

நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். இவ்வழக்கின் விவரம் அனைத்தும் எனக்கு தெரியும். நான் மேலே கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். விருதுநகர் மாவட்ட வழக்கறிஞர் எழுத்தர் சங்கத்தின் தலைவராக இருந்து வருகிறேன். இந்நிலையில் எனது கிராமத்தில் எனக்கு சொந்தமான 14 செண்ட் நிலம் உள்ளது. அதில் 14 தென்னை மரங்களும். எலுமிச்சை மரங்களும், வேப்ப மரங்களும். முருங்கை மரங்களும். அகத்தி கீரையும் பயிர் செய்து வருகிறேன். கடந்த 25.07.2024 ம் தேதி யன்று நான் நீதிமன்ற பணிக்கு வந்திருந்தபோது அன்றையதினம் சுமார் 12.00 மணியளவில் தம்ழ்நாடு மின்சார வாரியம் மற்றும் பகிரமான கழகம் ஊரகம் வடக்கு பகுதியின் உதவி மின் பொறியாளர் அ.கற்பகசெல்வி அவர்களின் உத்தரவின் பேரில் மின்சார ஊழியர்களான மகேஸ், அந்தோணி, மற்றும் அந்த பகுதி போர்மேன் ஆகியோர்கள் எனது இடத்தில் எந்தவித அனுமதியும் பெறாமலும் அத்துமீறி உள்ளே நுழைந்து எந்தவித அனுமதியும் கொடுக்காமலும், எந்தவித வாய்ப்பும் கொடுக்காமலும், எனது இடத்திற்குள் அராஜகமாக நுழைந்த 4 தென்னை மரங்களை மரக்கிளைகள் பாதிக்கும் அளவிற்கும் முருங்கை மரங்களையும் வெட்டியும், ஒடித்தும் சேதப்படுத்தியுள்ளார்கள். பாதிக்கப்பட்ட நான் எதிரி பணிபுரியும் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். **புகார் மனுவின் கை நகல் ம.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது புகார் மனுவை பெற்றக்கொண்ட காவல் அதிகாரி மறுநாள் வரும்படி தெரிவித்தார். மறுநாள் எதிரியிடம் சென்று எனது புகார் பற்றி விசாரித்தேன். அதற்கு என்னை வெளியில் இருக்கும்படி சொன்னார். காலை 10.00 மணியிலிருந்து மதியம் 1.00 மணி வரை காவல் நிலையத்தில் காத்திருந்தேன். பின்பு அவரிடம் கேட்டபோது " நீ வக்கீல் குமாஸ்தா தலைவராக இருந்தால் என்ன உனது புகாரை எடுக்க முடியாது " என்று சொன்னார். அவர் என்னை காவல் நிலையத்திற்கு வெளியே போகுமாறு விரட்டினார். இதனால் காவல் நிலையத்திலிருந்த பொது மக்கள் முன்பு எனக்கு அவமானம் ஏற்பட்டது. இந்திய அரசியல் சட்டத்தில் எனக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமை மறுக்கப்பட்டுள்ளது. பின்னர் அவசர எண்.100 க்கு தகவல் சொன்னேன். அன்றே மாலை 3.00 மணிக்கு தொலைபேசி வாயிலாக சென்னை

காவல் துறை இயக்குநருக்கு தகவல் சொன்னேன். திருவில்லிபுத்தூர் காவல் துணை கண்காணிப்பாளருக்கும், விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும் எனக்கு நடந்த அநியாயம் பற்றி வாட்ஸ்அப் மூலம் புகார் தெரிவித்தேன். 29.7.2024 ம்தேதி பதிவு தபால் மூலம் விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அனுப்பினேன். தற்போது வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கடந்த 2.8.2024 ம் தேதி எதிரி மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க சொல்லி பதிவு தபால் மூலம் புகார் அனப்பினேன். **அந்த புகார் மனு மற்றும் அஞ்சலக ரசீது மசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது புகாரை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுக்க சொல்லி மாவட்ட கண்காணிப்பாளருக்கு பரிந்துரை கொடுத்துள்ளார். **பரிந்துரையின் எனக்கு சார்பு செய்யப்பட்ட நகல் மசாஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஆனால் எதிரி மீது தற்போது வரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. 14.8.2024 ம்தேதி தமிழக உள்துறை செயலாளர், காவல் துறை இயக்குநர், தென்மண்டல காவல் துறை துணை தலைவர், விருதுநகர் மாவட்ட கண்காணிப்பாளர் ஆகியோருக்கு பதிவு தபால் மூலம் புகார் அனுப்பியும் அதனை அவர்கள் பெற்றுக்கொண்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. **அந்த பதிவு தபால்கள் மசாஆ. 4, ஒப்புதல் அட்டைகள்(4 எண்ணம்) மசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மீண்டும் 16.9.2024 ம்தேதி காவல் கண்காணிப்பாளருக்கு மாவட்ட ஆட்சியர் கொடுத்த பரிந்துரை கடிதத்திற்கு நினைவூட்டுதல் கடிதத்தை பதிவு தபால் மூலம் அனுப்பினேன். **நினைவூட்டுதல் கடிதம் மசாஆ.6 ஆக குறியீடு செய்யப் படுகிறது.** 24.9.2024 ம்தேதி மதியம் 3.30 மணிக்கு எனது தொலை பேசிக்கு நான் கொடுத்த புகார் மனு மீது compromise effected என்று மேற்குறிப்பு செய்யப்பட்டு குறுஞ்செய்தி வந்தது. 26.9.2024 ம்தேதி கூடுதல் காவல் கண்காணிப்பாளருக்கு எனது புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக பதில் வேண்டி தகவல் அறியும் சட்டத்தின் கீழ் மனு செய்தேன். **தகவல் அறியும் உரிமை சட்ட மனு மற்றும் அஞ்சலக ரசீது மசாஆ.7 ஆகவும், ஒப்புதல் அட்டை மசாஆ. 8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** 12.10.2024 ம் தேதி எனக்கு பதில் கொடுக்கப்பட்டது. **அந்த பதில் மசாஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதில் நான் கொடுத்த புகாருக்கு சிஎஸ்ஆர்.542/2024 வழங்கப்பட்டு என்னை விசாரித்ததாகவும் மனு முடிக்கப் பட்டதாகவும் தவறாக சொல்லப்பட்டுள்ளது. இதனால் எனக்கு மன வேதனையும், மன உளைச்சலும்

ஏற்பட்டது. நான் கொடுத்த புகாரின் மீது எதிரி நடவடிக்கை எடுக்காததால் அவருக்கெதிராக உயர் அதிகாரிகளுக்கு பலமுறை தபால் அனுப்பியும் நடவடிக்கை இல்லாததால் இந்த வழக்கை தாக்கல் செய்கிறேன். நான் கொடுத்த புகார் மீது மனு ரசீது எதுவும் கொடுக்காமல் மனு ரசீது கொடுத்ததாக வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. எனது புகாரின் மீது விசாரணை செய்து எனது வாக்குமூலம் பதிவு செய்ய்பட்டதாக சொல்லப்படுகிறது. ஆனால் என்னை போலீசார் விசாரிக்கவும் இல்லை. வாக்குமூலமும் பெறவில்லை நடக்காத சம்பவத்தை நடந்ததாக சொல்லி மேலதிகாரிகளுக்கு பொய்யான தகவலை எதிரி கொடுத்துள்ளார். எனது புகாரில் சொல்லப்பட்டுள்ள எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் அவர்களை காப்பாற்றும் நோக்கத்தில் இந்த எதிரி செயல்பட்டுள்ளார். எனது புகாரின் எதிரிகளை விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக செயல்பட்டுள்ளார். எதிரி சட்டரீதியாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து செயல்பட்டுள்ளார். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக்கோரி 22.10.2024ம் தேதி உள்துறை செயலாளருக்கும் காவல் துறை இயக்குநருக்கும், தென்மண்டல காவல் துறை தலைவருக்கும், காவல் கண்காணிப்பாளருக்கும் பதிவு தபால் மூலம் கடிதம் அனுப்பினேன். **அந்த பதிவு தபால் கடிதம் மசாஆ.10 மற்றும் அஞ்சலக ரசீதுகள் (4 எண்ணம்) மசாஆ. 11 ஆக குறியீடு செய்ய்படுகிறது. புகார் மனுவினை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை ம.சா.ஆ.12. என்னுடைய ஆதார் அட்டையின் நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) மசாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எதிரி மீது நடவடிக்கை எடுக்க சொல்லி பலமுறை பல உயர் அதிகாரிகளிடம் தபால் அனுப்பியும் எதிரி மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதனால் சமூகம் நீதிமன்றத்தை நாடியுள்ளேன். எதிரி அவரது பணியை செய்யாமல் எனது புகாரின் எதிரிகளை காப்பாறும் நோக்கில் அவர்களுடன் கைகோர்த்துக்கொண்டு செயல்பட்டு வருகிறார். எதிரி மீது 199,248 பி.என்.எஸ் பிரிவின் கீழ் சம்மன் அனுப்பி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.